**வாக்குமூலம்**

**சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம்.**
**S.C.No.203/2024**
**வழக்கு சாட்சி PW6**
**1873ம் ஆண்டின் 10வது விதியின்படி திரு.பெரியசாமி அவர்களால் திறந்த நீதிமன்றத்தில் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : செல்வக்குமார் | தொழில் | : பெயின்டிங் தொழில் |
| தகப்பனார் பெயர் | : பழனிச்சாமி | கணவர் பெயர் | : |
| கிராமம் | : நாகப்பன்பட்டி | வயது | : சுமார் 40 |
| தாலுக்கா | : ஒட்டன்சத்திரம் | நாள் | : 02.03.2026 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | | |

**(CMP No.01/2025 மனுவானது கடந்த 24.11.2025ம் தேதி அனுமதிக்கப்பட்டதன் பேரில் சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு மேற்கொள்ளப்படும் குறுக்கு விசாரணை)**
**( 2வது குற்றம் சாட்டப்பட்டவர் இந்நீதிமன்றத்தில் முன்னிலையாகவில்லை பாரதிய குடிமக்கள் சட்டம் பிரிவு 355ன் கீழான மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டுள்ளது.)**

1, 2 குற்றம் சாட்டப்பட்டவர்கள் தரப்பில் மேற்கொள்ளப்படும் குறுக்கு விசாரணை

சம்பவத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றால் ? சரிதான். ஏற்கனவே பெருமாள் என்பவருக்கும் ரவிக்குமார் என்பவருக்கும் முன்விரோதம் இருந்தது. அம்பிளிக்கை காவல் நிலையத்தில் புகார் உள்ளது. சம்பவம் நடந்து எத்தனை மணி நேரம் கழித்து எனக்கு தகவல் கொடுக்கப்பட்டது என்றால்? சம்பவம் 7.30 மணி முதல் 8.00 மணிக்குள் நடந்தது. எனக்கு 8.15 மணிக்கு தகவல் கிடைத்தது. அம்பிளிக்கை காவல் நிலையத்திற்கு நான் தான் தகவல் சொன்னேன். பெருமாள் என்பவரிடம் காவல்துறையினர் எப்போது வாக்குமூலம் எங்கு வைத்து பெற்றார்கள் என்றால் சி.எப்.மருத்துவமனையில் வைத்து வாக்குமூலம் வாங்கினார்கள். காவல் நிலையத்தில் நான் தகவல் கொடுத்துவிட்டு பெருமாள் என்பவரை நான் தான் மருத்துவமனைக்கு அழைத்து சென்றேன். அழைத்து சென்ற நேரம் என்ன இருக்கும் என்றால் ? சுமார் 8.30 மணி இருக்கும். சம்பவமானது இரவு 9.00 மணிக்கு நடந்ததாக சொன்னால் அது தவறு. என்னிடம் காட்டப்படும் வாக்குமூலத்தில் எனது கையெழுத்து உள்ளதா என்றால் ? இல்லை. என்னிடம் காவல்துறையினர் கையெழுத்து ஏதேனும் பெற்றார்களா

என்றால் இல்லை. நேற்று சம்மனில் காவல்துறையினர் கையொப்பம் செய்தார்கள். ஏற்கனவே சம்மனை தவிர வேறு கையொப்பம் காவல்துறையினர் வாங்கவில்லை என்றால் ? ஆமாம்.பெருமாள் என்பவர் உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் ? இல்லை.

C JAYAPPRAKASH

Digitally signed by C JAYAPPRAKASH
Date: 2026.03.02 13:13:56 +0530

**சார்பு நீதிபதி**
**ஒட்டன்சத்திரம்**